# 2011

# වාර්ෂික වාර්තාව සහ ගිණුම් ප්‍රකාශය
# வருடாந்த அறிக்கையும் நிதிக்கூற்றும்
# ANNUAL REPORT & STATEMENT OF ACCOUNTS

ANNUAL REPORT

## නැවත පදිංචි කරවීමේ අධිකාරිය
## மீளக்குடியமர்த்துதல் அதிகாரசபை
## *RESETTLEMENT AUTHORITY*

189, Galle Road, Colombo 03.

# பொருளடக்கம்

1. கையளிப்பு கடிதம்
2. பணிப்பாளர் சபை உறுப்பினர்கள்
3. செயற்பாட்டு அறிக்கை
4. நிதிக்கூற்று
5. கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

# கையளிப்பு கடிதம்

கௌரவ. எம். ஏச். குணரத்ன வீரகோன்,
பாராளுமன்ற உறுப்பினர் ,
மீள் குடியேற்ற அமைச்சு,

கௌரவ அமைச்சர் அவர்களுக்கு,

1971ம் ஆண்டு 38ம் இலக்க நிதிச் சட்டம், மற்றும் 2007ம் ஆண்டு 09 ஆம் இலக்க மீளக்குடியமர்துதல் அதிகார சபையின் சட்டத்தின் பிரகாரம் மீளக்குடியமர்துதல் அதிகார சபையின் 2011 ஆம் ஆண்டு டிசம்பர் 31 ஆம் திகதி முடிவடைந்த நிதியாண்டிற்கான வருடாந்த அறிக்கையையும் நிதிக்கூற்றையும் பணிப்பாளர் சபை சார்பில் சமர்பிப்பதில் மகிழ்சியடைகிறேன்

உங்கள் உண்மையுள்ள,

**B.H.** (புத்தி) பஸ்ஸபெரும
தலைவர் ,
மீளக்குடியமர்த்துதல் அதிகாரசபை,
189, காலி வீதி, கொழும்பு - 03

# பணிப்பாளர் சபை 2011

| | | |
|---|---|---|
| *Mr. B.H.* (புத்தி) பஸ்ஸபெரும | - | தவிசாளர் |
| *Mr.* "கருமயோகி" *A.* லோகேஸ்பரன் | - | பிரதி தவிசாளர் |
| *Mr. K.G.P.* புஸ்பகுமார | - | பணிப்பாளர் |
| *Mr. R.H.W.* குமாரஸ்ரீ | - | பணிப்பாளர் |
| *Mrs. H.C.W.* வித்யாமணி | - | பணிப்பாளர் |
| *Mr. I.D.* விஜயரட்ண | - | பணிப்பாளர் |
| *Ms. R.* மஹகொடகே | - | பணிப்பாளர் |
| *Ms. K.* சத்தியவர்தன் | - | பணிப்பாளர் |
| *Mr. S.* ராஜ்சங்கர் | - | பணிப்பாளர் |

**இலக்கு (Mission)**

உள்நாட்டில் இடம்பெயர்ந்த ஆட்களும் அகதிகளும் அபிவிருத்திச் செய்முறையினுட் பிரவேசிப்பதனை வசதிப்படுத்துவதன் மூலம் அவர்களுக்குப் புனர்வாழ்வளிப்பதற்கும் உதவுவதற்குமென அவர்களின் மீளக்குடியமர்த்துதலை அல்லது மீளவமர்த்துதலை வசதிப்படுத்துதல்

**நோக்கு (Vision)**

உள்ளூரில் இடம்பெயர்ந்த ஆட்களையும் அகதிகளையும் காப்பதும் மதிப்புவாய்ந்ததுமானதொரு முறையில் மீளக்குடியமர்த்துவதனை அல்லது மீள அமர்த்துவதனை உறுதிப்படுத்தல்.

**மீள்குடியேற்ற அதிகாரசபையின் பணிகள்**

(1) உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களுக்காகவும் அகதிகளுக்காகவும் மீளக்குடியமர்த்தல் அமைச்சின் கலந்தாலோசனையுடன் மீளக்குடியமர்த்தற் கொள்கையொன்றை வகுத்தமைத்தலும் செயற்படுத்தலும்:

(2) ஆட்கள் புலம்பெயர்தலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கென அரசாங்கத்தின், நன்கொடையளிப்போரின், சர்வதேச அரசாங்கம் சாரா ஒழுங்கமைப்புகளின், குடியியற்சங்க முகவர் நிலையங்களின் மற்றும் தேவைப்பட்ட ஆணைப்பத்திரங்களையும் மற்றும் மூலவளங்களையும் கொண்டுள்ள ஏனையோரின் முயற்சிகளையும் ஒன்றிணைத்தல்:

(3) காப்பானதும் மதிப்புவாய்ந்ததுமானவொரு முறையில் உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களையும் அகதிகளையும் மீளக்குடியமர்த்துவதற்கும் மீளவமர்த்துவதற்கும் குறிப்பிட்ட நிகழ்ச்சித்திட்டங்களையும் கருத்திட்டங்களையும் வகுத்தமைத்தலும் செயற்படுத்துதலும்.

(4) பிறப்பு, இறப்பு, மற்றும் திருமணச்சான்றிதழ்கள், ஆளடையாள அட்டைகள், ஆதனம் தொடர்பான உறுதிகள் முதலியன போன்ற, காணாமல் போன ஆவணங்கள் மற்றும் ஏதேனும் அரசாங்க திணைக்களத்திடமிருந்து அவர்களுக்கு தேவைப்படக்கூடிய வேறு ஏதேனும் ஆவணங்களையும் பெறுவதற்கு உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களுக்கும் அகதிகளுக்கும் உதவுதல்:

(5) உள்ளக கட்டமைப்பு வசதிகளையும், கல்வி மற்றும் சுகாதார வசதிகளையும் வழங்குவதற்கும் உதவுதல்:

(6) மீளக்குடியமர்த்துதலையும் மீளவமர்த்துதலையும் வசதிப்படுத்துவதற்கான வீடமைப்புத்திட்டங்களுட்பட்ட, மீளக்குடியமர்த்தல் நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துதல்.

(7) திட்டமிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு நிதி மூலவளங்களைத் திரட்டுவதற்கு உதவுதல்:

(8) சொத்தாண்மை மற்றும் அசைவுள்ள, அசைவற்ற சொத்துக்களின் உடைமை, உரிமை என்பன தொடர்பான பிரச்சினைகளைத் தீர்த்துவைப்பதனை வசதிப்படுத்துதல்:

(9) உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களுக்கும் ஓம்பு சமுதாயத்தினருக்குமிடையே சிறந்த புரிந்துணர்வை ஏற்படுத்துதல்:

(10) உள்நாட்டில் புலம்பெயர்ந்த ஆட்களுக்குத் தத்துவமளிப்பதற்கான கலாச்சார உரிமைகளுட்பட அடிப்படை மனித உரிமைகளை மீள நிலைநாட்டுவதனை வசதிப்படுத்துதல்:

(11) புலம்பெயர்ந்தோரின் தேவைகள் பற்றிய முறையீடுகளை பெறுதலும் தீர்வுகளை காணும்படி ஆணைபெற்ற முகவர் நிலையங்களுக்கு அதுதொடர்பில் முறையீடுகளை செய்தலும்.

(12) தனிப்பட்ட அல்லது சமுதாயத்தேவைகளுக்கிணங்க, மீள்வதற்கும் அபிவிருத்திக்குமான பங்காண்மைகளை ஆரம்பித்துச்செயற்படுவதற்குப் புலம்பெயர்ந்தோரை ஆள்திரட்டுதல்:

(13) புலம்பெயர்ந்த ஆட்களுக்கும் அகதிகளுக்குமிடையே வாழ்க்கை வழிவகைகளுக்கான செயற்பாடுகளை மேம்படுத்துதல்:

(14) அவர்களின் மீளுகைக்கான இலக்கிடப்பட்ட கொள்கைகள், மூலவளங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய முன்னேற்றம் என்பனவற்றின் மீதான தகவல்களை நியாயமான அளவுக்குப் பெறுவதற்காக ஏற்பாடு செய்தலும், சம்பந்தப்பட்ட இடையீடு செய்கின்ற முகவர் நிலையங்களுடன் கலந்துரையாடுதலை வசதிப்படுத்துதலும்:

(15) அத்துடன் நிலக் கண்ணிவெடிகளையும் சிதைவுகளையும் அகற்றுவதன் மூலமும் சேதமுற்ற உட்கட்டமைப்பை பழுதுபார்ப்பதன் மூலமும் மீளக்குடியமர்தலுக்கு உரியதான இயன்முறைச் சுற்றாடல் ஒன்றை உறுதிப்படுத்துதல்

# செயற்பாட்டு அறிக்கை 2011

## 01. மடு வீடமைப்புத் திட்டம்

மக்கள் வங்கியின் நலன் புரிச் சங்கத்தின் நிதியுதவியின் கீழ் மடு பிரதேச செயலகப்பிரிவில் மீள்குடியேற்றப்பட்ட 50 குடும்பங்களுக்கு நிரந்தர வீடுகள் அமைத்ததன் பின் “மடு வீடமைப்புத் திட்டத்தின்” கீழ் மீள் குடியேற்ற அதிகாரசபை இணைந்து நீர், மின்சாரம் மற்றும் உள்ளக வீதி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு உரிய அமைச்சுக்களினூடாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.






## 02. பாடசாலைகளுக்கும் வாசிகசாலைகளுக்கும் ஆங்கிலப்புத்தக வினியோகம்

வடக்கு, கிழக்கில் மீள் குடியேறிய குடும்பங்களின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளின் முன்னேற்றம், மற்றும் அறிவு வளர்ச்சியை எதிர்பார்த்து வவுனியாவிலுள்ள பாடசாலைகளுக்கு அச்சிடப்பட்ட புத்தகங்கள் வழங்கப்பட்டது. இதற்காக ஆசியஅமைப்பு அனுசரணை வழங்கியுள்ளது.









## 03. மீள்குடியேறிய உள்ளூர் இடம்பெயர்ந்தவர்களின் தகவல் திரட்டல்

வடக்கு, கிழக்குப் பிரதேசங்களில் யுத்தத்தினால் இடம் பெயர்ந்திருந்து மீள் குடியேறிய குடும்பங்களது விபரங்கள் பிரதேச செயலகப் பிரிவுமட்டத்தில் ஒன்று திரட்டப்பட்டுள்ளது.

| மாவட்டம் | விபரங்கள் கிடைக்கப்பெற்றுள்ள பிரதேச செயலகப் பிரிவுகளின் எண்ணிக்கை |
|---|---|
| 1. அம்பாறை | 05 |
| 2. மட்டக்களப்பு | 07 |
| 3. திருகோணமலை | 02 |
| 4. யாழ்ப்பாணம் | 15 |
| 5. மன்னார் | 05 |
| 6. வவுனியா | 03 |
| 7. முல்லைத்தீவு | --- |
| 8. கிளிநொச்சி | 04 |

## 04. மீள்குடியேற்ற அமைச்சின் வேலைத்திட்டங்களுக்கு ஒத்துழைத்தல்

மீள் குடியேற்ற அமைச்சுடன் இணைந்து வவுனியா மெனிக் பாமிலுள்ள இடம் பெயர்ந்த மக்களை மீள் குடியேற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.









## 05. மருதங்கேணி பிரத செயலக பிரிவில் ஆய்வு மேற்கொள்ளல்

மீள் குடியேற்ற அமைச்சும் மீள் குடியேற்ற அதிகார சபையும் இணைந்து மருதங்கேணி பிரதேச செயலக பிரிவில் உள்ள குடும்பங்களின் விபரங்களை சேகரிப்பதற்கான ஆய்வு நடாத்தியது. இவ்வாய்வில் 2570 குடும்பங்களின் தரவுகள் பெறப்பட்டு பதியப்பட்டது.





# மீளக்குடியமர்த்துதல் அதிகாரசபை

31.12.2011 ஆம் ஆண்டிற்கான முடிவடைந்த நிதிக்கூற்று

| 2010 | விபரம் | குறிப்பு | 2011 |
|---|---|---|---|
| **44,803,452.63** | வருமானம் | | **15,074,763.30** |
| 14,000,000,.00 | திறைசேறி வழங்கியது | | 15,000,000.00 |
| 364,500.00 | FORUT & தேறிய வருமானம் | | - |
| 90,952.63 | வேறு | | 74,763.30 |
| **30,348,000.00** | மீள்குடியேற்ற அமைச்சு முகாம் பராமரிப்பு கொடுப்பனவுகள் | | - |
| **-** | | | - |
| **44,752,382.22** | செலவீனம் | | **14,614,672.73** |
| | | | |
| **44,752,382.22** | நிலைய நிர்வாகச் செலவு | | **14,614,672.73** |
| 7,970,057.15 | தனிநபர் ஊதியம் | | 8,493,072.06 |
| 888,358.03 | பிரயாணச் செலவு | | 646,914.00 |
| 2,107,900.00 | உபகரணங்கள் மற்றும் விநியோக செலவு | **01** | 1,701,092.82 |
| 3,148,405.00 | கொந்தராத்து செலவு | **02** | 3,520,564.06 |
| 235,268.59 | பராமரிப்பு செலவு | | 194,464.00 |
| - | வேறு | | 17,500.00 |
| **28,808,000.00** | மீள்குடியேற்ற அமைச்சு முகாம் பராமரிப்பு கொடுப்பனவுகள் | | - |
| **1,540,000.00** | மீள் செலுத்தியது - மீள்குடியேற்ற அமைச்சு | | - |
| 54,393.45 | தேய்வு | **03** | 41,065.79 |
| 51,070.41 | மேலதிக செலவு | | 460,090.57 |
| (11,045.00) | 2010ல் தேறியது | | 40,025.41 |
| **40,025.41** | தேறிய மேலதிக செலவு / மீதி | | **500,115.98** |

# மீளக்குடியமர்த்துதல் அதிகாரசபை

(பாராளுமன்ற சுற்றறிக்கை இலக்கம் 09 2007 இற்கு இணங்க நிறுவப்பட்டது)

31.12.2011 ஆம் ஆண்டிற்கான ஐந்தொகை

| 2010 | விபரம் | குறிப்பு | 2011 |
|---|---|---|---|
| | சொத்துக்கள் | | |
| 174,008.00 | நிலையான சொத்துக்கள் | | **132,942.76** |
| 189,754.00 | நடைமுறைச் சொத்துக்கள் | **04** | **485,363.56** |
| **363,762.00** | மொத்தம் | | **618,306.32** |
| | பொறுப்புக்கள் | | |
| 40,025.00 | தேறிய மேலதிக செலவு | | **500,115.98** |
| 323,737.00 | நடைமுறைப் பொறுப்புக்கள் | **05** | **118,190.34** |
| **363,762.00** | மொத்தம் | | **618,306.32** |

# மீளக்குடியமர்த்துதல் அதிகாரசபை

31.12.2011 ஆம் ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று

| 2010 | விபரம் | 2011 |
|---|---|---|
| | செயற்பாட்டு ரீதியான காசுப்பாய்ச்சல் | |
| 40,025.00 | மேலதிக செலவானது சாதாரண செயற்பாடுகளில் இருந்து பெறப்பட்டது | 50,115.98 |
| | காசு அற்ற செயற்பாடுகள் | |
| 54,394.00 | தேய்வுக்காக ஒதுக்கப்பட்டது | 41,065.79 |
| 323,737.00 | நடைமுறைப் பொறுப்பு | 118,190.34 |
| 418,156.00 | மொத்தம் | 659,372.11 |
| | செயற்பாட்டு ரீதியான தேறிய காசுப்பாய்ச்சல் | |
| 228,402.00 | முதலீட்டுச்செயற்பாட்டு காசுப்பாய்சல் | 174,008.55 |
| 189,754.00 | நிலையான சொத்துக்கள் | 485,363.56 |
| 418,156.00 | மொத்தம் | 659,372.11 |

# குறிப்புக்கள்

குறிப்பு 01 ஏனைய வருமானம்

| | |
|---|---|
| வாகன பாவனைக் கட்டணம் | 12,600.00 |
| வேறு | 62,163.30 |
| மொத்தம் | **74,763.30** |

குறிப்பு 02 காரியாலய உபகரண இருப்பு மற்றும் வினியோக செலவுகள்

| | காகிதாதிகள் | வினியோகங்கள் | மொத்த செலவுகள் |
|---|---|---|---|
| மீதி கீழ் கொ / வ 01-01-2011 | 29,382.25 | 1,317,262.33 | |
| 2011 ல் கொள்வனவு | 344,748.69 | 70,250.00 | |
| | 374,130.94 | 1,387,512.33 | |
| மீதி கீழ் கொ / செ 31-12-2011 | (43,050.45) | (17,500.00) | மீளப்பெற்றது |
| இந்த வருட செலவுகள் | **331,080.49** | **1,370,012.33** | **1,701,092.82** |

குறிப்பு 02 கொந்தராத்து சேவை

| | |
|---|---|
| மீதி கீழ் கொ / வ 01-01-2011 | (291,759.40) |
| இந்த வருட செலவுகள் | (8,526.21) |
| | 3,771,512.33 |
| | 3,471,226.72 |
| செலவு செய்ய வேண்டியது | 49,337.34 |
| இந்த வருடத்துக்கான செலவுகள் | 3,520,564.06 |

குறிப்பு 03 நிலையான சொத்து

| | ஆரம்ப மீதி | தேய்வு வீதம் | தேறிய பெறுமதி | மீதி |
|---|---|---|---|---|
| கதிரை (Arm Chair) | 16,242.30 | 10% | 1,624.23 | 14,618.07 |
| கணணி (Computer) | 137,099.25 | 25% | 34,274.81 | 102,824.44 |
| புகைப்பட கருவி (Camara) | 20,667.00 | 25% | 5,166.75 | 15,500.25 |
| | **174,008.55** | | **41,065.79** | **132,942.76** |

குறிப்பு 04 நடைமுறைச் சொத்து

| | |
|---|---|
| காகிதாதி இருப்பு 31-12-2011 | 43,050.45 |
| கடன்படுனர் | 55,100.00 |
| கையில் உள்ள காசு | 387,213.11 |
| | **485,363.56** |

குறிப்பு 05 நடைமுறைப் பொறுப்பு

| | |
|---|---|
| 2011 ல் செலுத்தப்படாத செலவு | 49,337.34 |
| பொது வைப்பு | 68,853.00 |
| | **118,190.34** |

# கணகீட்டுக்கொள்கையும் மற்றும் வெளிப்படுத்துதலும்

## ஆரம்பத்தயாரிப்பு

* இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் விதிகளுக்கமையவும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைக்கிணங்கவும் வருடந்தோறும் ''நிதிக்கூற்றறிக்கை'' தயாரிக்கப்பட்டுள்ளது

* நிதிக்கூற்றறிக்கையினை தயாரிப்பதற்கு 1971ம் ஆண்டின் 38ம் இலக்க நிதிச்சட்டமும் இலங்கையின் கணக்கெடுத்தலும் கணக்குப்பரிசேதணையும் தொடர்பான 1955ம் ஆண்டின் 15ம் இலக்க சட்டடமும் பின்பற்றப்படுகின்றன.

## ஐந்தொகை தயாரிப்பின் பின்னரான நிகழ்வு

* ஏவ்வித நிகழ்வும் இடம்பெறவில்லை.

## பெறுமானத்தேய்வு

* இயந்திர தளபாட அலுவலக உபகரணங்கள் தொடர்பான பெறுமானத்தேய்வு பின்வரும் முறையில் மதிப்பிடப்படுகின்றது

| | |
|---|---|
| தளர்பாடங்கள் உபகரணங்கள் பொருத்துக்கள் | 10% |
| கணணிகள் | 25% |

* கணணி இயந்திரங்கள் தளர்பாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்கள் தொடர்பான பெறுமானத்தேய்வு அவை கொள்வனவு செய்யப்பட்ட வருடந்தொடக்கம் கணக்கிடப்பட்டாலும் அவை அகற்றப்படும் ஆண்டில் கணக்கிடப்படுவதில்லை.

## இருப்பு

* இருப்பு காகிதாதி உபகரணங்களை மட்டும் உள்ளடக்கும் கொள்விலைப்பெறுமதி கணிக்கப்படும்.

## பணமும் பணப்பெறுமதி வாய்ந்தவையும்

* காசுப்பாய்சற்கூற்றினைத் தயாரிப்பதற்கு கையிருப்பிலுள்ள பணப்பெறுமதி வாய்ந்தவை

# வரவும் செலவும்

## திரட்டிய அடிப்படை

* திரட்டிய செலவுத்தொகை 31.01.2012 வரையிலான காலப்பகுதியில் கணக்கீடு செய்யப்பட்ட சிட்டைகளின் தொகையாகும்

## அரச பங்களிப்பு

* வருமான அறிக்கையில் அரச பங்களிப்பு திறைசேரிக்கொடுப்பணவாக இனங்காணப்பட்டுள்ளது.

# විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
## கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
## AUDITOR GENERAL'S DEPARTMENT

| | | |
|---|---|---|
| මගේ අංකය / எனதுஇல / My No. } ඩීර්/ඒ/ආර්ඒ/එෆ්ඒ/2011 | ඔබේ අංකය / உமது இல / No. } | දිනය / திகதி / Date } 2012 අගෝස්තු 2? දින |

සභාපති,

නැවත පදිංචි කරවීමේ අධිකාරිය.

**නැවත පදිංචි කරවීමේ අධිකාරියේ 2011 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳ 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2) ( සී ) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව.**

---

යථෝක්ත වාර්තාව මේ සමඟ එවා ඇත.

එච්. ඒ .එස්.සමරවීර

විගණකාධිපති

පිටපත් 1. ලේකම් - මුදල් හා ක්‍රමසම්පාදන අමාත්‍යාංශය

2. ලේකම් - නැවත පදිංචිකිරීමේ අමාත්‍යාංශය

---

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව

இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை

No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2887028 - 34

ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223

ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

**විගණකාධිපති දෙපාර්තමේන්තුව**
**கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்**
**AUDITOR GENERAL'S DEPARTMENT**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය / எனதுஇல / My No. | ඩීර්/ජ/ආර්ඒ/එෆ්ඒ/2011 | ඔබේ අංකය / உமது இல / Your No. | | දිනය / திகதி / Date | 2012 නොවැම්බර් 12 දින |

සභාපති,
නැවත පදිංචි කරවීමේ අධිකාරිය

**නැවත පදිංචි කරවීමේ අධිකාරියේ 2011 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳ 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2) (සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව**

---

සමාංක හා 2012 අගෝස්තු 28 දිනැති මාගේ ලිපියට යොමු වේ.

2. ඉහත ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

එච්.ඒ.එස්. සමරවීර
විගණකාධිපති

පිටපත් :- 01. ලේකම්, නැවත පදිංචිකිරීමේ අමාත්‍යාංශය
02. ලේකම්, මුදල් හා ක්‍රම සම්පාදන අමාත්‍යාංශය

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. oaggov@sltnet.lk

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனதுஇல / My No. } டீஈ/ஜீ/ஆர்ஏ/எப்ஏ/2011
ඔබේ අංකය / உமது இல / Your No. }
දිනය / திகதி / Date } 2012 ஆகஸ்ட் 28

தலைவர்,
மீள்குடியேற்ற அதிகாரசபை

**மீள்குடியேற்ற அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின்படி கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

மீள்குடியேற்ற அதிகாரச்சபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ஐந்தொகை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசோட்டக்கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்களையும் ஏனைய விளக்கத் தகவல்களையும் உள்ளடக்கிய 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2007 இன் 09 ஆம் இலக்க மீள்குடியேற்ற அதிகாரசபை அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த அறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம், ஒரு விபரமான அறிக்கை 2012 யூன் 30 ஆந் திகதி அதிகாரசபையின் தலைவருக்கு வழங்கப்பட்டது.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දූව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, பத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2887028 - 34
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளினை கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் அதிகாரசபையினால் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி அதிகாரசபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

1.4 **முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

2. **நிதிக்கூற்றுக்கள்**

2.1 **முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து இலங்கை மீள்குடியேற்ற அதிகாரசபையின் 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2. **நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

2.2.1 **இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை**

இலங்கை கணக்கீட்டு நியமம் 09 இன் பிரகாரம் காசுப் பாய்ச்சல் கூற்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

2.2.2 **கணக்கீட்டுக் குறைபாடுகள்**

மீளாய்வாண்டின் போது அதிகாரசபைக்கு திறைசேரியினால் வழங்கப்பட்டிருந்த ரூபா 5,600,000 பெறுமதியான டபிள் கப் வாகனம் நிலையான சொத்துக்களில் வாகனங்களின் கீழ் கணக்கிடப்பட்டிராமையால் சொத்துக்கள் அதே தொகையால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்ததுடன் இதற்கு உரித்தான பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்கையிலும் விடுபட்டிருந்தது.

2.2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

பின்வரும் இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுக்கான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) 2007 இன் 09 ஆம் இலக்க மீள்குடியேற்ற அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் III ஆம் பகுதியின் 20(1) ஆம் பிரிவு | அதிகாரசபையிடம் வேறான ஓர் நிதியம் வைத்திருக்க வேண்டிய போதிலும் அத்தகைய நிதியம் ஒன்று ஸ்தாபிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 14(1) ஆம் பிரிவு மற்றும் 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவு | மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்களுடன் வருடாந்த வரைபு அறிக்கையின் ஓர் பிரதி கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

3. நிதி மீளாய்வு

3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் படி, மீளாய்வாண்டிற்காக அதிகாரசபையின் தொழிற்பாடுகளின் விளைவு ரூபா 460,090 ஆன மிகையை ஏற்படுத்தியிருந்ததுடன் இதற்கு எதிராக முன்னைய ஆண்டிற்கான மிகை ரூபா 51,070 ஆனமையால் நிதி விளைவுகளில் ரூபா 409,020 ஆன அதிகரிப்பு காணப்பட்டது. மீளாய்வாண்டிற்கான செலவினம் குறைவடைந்திருந்தமை நிதி விளைவுகளில் அதிகரித்தமைக்கு பிரதான தாக்கமளித்திருந்தன.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

மீள்குடியேற்றத்தின் போது எதிர்நோக்கும் முக்கிய பிரச்சனைகளான உணவு, நீர், சுகாதார வசதிகள், சேதமடைந்த வீடுகளுக்கு தீர்வளித்தல், உள்ளக ரீதியாக புலம்பெயர்ந்த நபர்களினதும் நலன்புரி மற்றும் அபிவிருத்தி உள்ளடங்கலாக உடனடியான மனிதநேய உதவியை வழங்கி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல், மீள் குடியேற்ற அமைச்சின் தலையீட்டில் மீள் குடியேற்ற அதிகாரசபையினால் மேற்கொள்ளப்படும். இதன் பிரகாரம், மீளாய்வாண்டின் போது 5,911 இடம்பெயர்ந்த குடும்பங்களை மீளக் குடியேற்றுவதற்காக 04 முகாம்களில் தங்கியிருந்ததுடன் ஆண்டின் இறுதியில் 02 முகாம்களில் மாத்திரமே 2,002 இடம்பெயர்ந்த குடும்பங்கள் இருந்தன.

மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள் பின்வருமாறாகும்.

(அ) அரசசார்பற்ற 04 அமைப்புகளின் தொடர்புபடுத்தலின் மூலம் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

(i) ஒட்டிசுட்டான் மற்றும் வெலிஓய பிரதேச செயலகப் பிரிவில் குடியமர்த்தப்பட்ட குடும்பங்களில் ஆரம்பப் பள்ளி மாணவர்களுக்காக அவசியமான பாடசாலை உபகரணங்கள் வழங்கல். (போரூட் அரசசார்பற்ற அமைப்பின் உதவியின் கீழ்)

(ii) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பிள்ளைகளின் கல்விக்காக நூலகப் புத்தகங்கள் வழங்கல். (ஆசிய மன்றத்தின் உதவியின் கீழ்)

(iii) ஒட்டிசுட்டான் பிரதேச செயலாளர் பிரிவில் சிறுவர் துஷ்பிரயோக மற்றும் போதை வஸ்து நிவாரண நிகழ்ச்சித்திட்டங்களை செயற்படுத்தல். (போரூட் அரச சார்பற்ற அமைப்பின் உதவியின் கீழ்)

(iv) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் மீள் குடியேற்றப்பட்ட மக்களின் காணி தொடர்பான சிக்கல்களைத் தீர்த்து வைப்பதற்கு பங்களித்தல் (அமெரிக்க உதவியின் கீழ் )

(v) வடக்கு, கிழக்கு மாகாணங்களில் ஆரம்பப் பாடசாலை செயற்திட்டங்களுக்காக பங்களிப்பை வழங்குதல். (புவர் அன்ட் புவரஸ்ட் அரச சார்பற்ற அமைப்பின் உதவியின் கீழ்)

(ஆ) மடு பிரதேசச் செயலகப் பிரிவில் மீள் குடியேற்றப்பட்ட 50 குடும்பங்களுக்காக நிரந்தர வீடுகளை வழங்குவதற்காக மக்கள் வங்கியின் பங்களிப்பில் நிர்மாணிக்கப்பட்ட மடு வீடமைப்புச் செயற்திட்டத்திற்கு நீர், மின்சார மற்றும் உள்ளக வீதிகளை தயாரிக்கும் நடவடிக்கைகளுக்காக மக்கள் வங்கியின் ஒத்துழைப்புடன் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல்.

எய்த முடியாத செயலாற்றல் நிலைகள் பின்வருமாறாகும்.

(அ) குடிபெயர்ந்து மீளக் குடியமர்த்தப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண மக்களுக்கு அவசியமான வசதிகளை வழங்குவதற்காக அம் மக்களை மீளக் குடியேற்றிய மாகாணங்களின் பிரதேசச் செயலாளர் பிரிவுத் தொகுதியின் 08 மாவட்டங்களின் தகவல் முறைமை தயாரிக்கப்பட்டிருந்த போதிலும் அதிகாரசபையினால் அத் தகவல்கள் பயன்படுத்தப்பட்டு அவசியமான வசதிகள் வழங்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) தகுனே செனெஹ்ஸ உதுரட்ட எனும் பேரில் தென்பகுதிக் குடும்பத்தினால் வடக்கில் குடியிருக்கும் குடும்பத்திற்கு உள்ள குறைபாடும் தெவைப்பாடுகளை நிவர்த்திசெய்து உதவிபுரியும் நோக்கில் செயற்திட்டம் ஒன்றை செயற்படுத்துவதற்கு தீர்மானித்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் போதிலேனும் இந் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

## 4.2 முகாமைத்துவத் திறமையீனங்கள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2007 இன் 09 ஆம் இலக்க மீள்குடியேற்ற அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 13 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கங்கள் பின்வருமாறு உள்ளன :

(i) நாட்டின் உள்நாட்டில் புலம்பெயர்ந்தவர்களும் அகதிகளும் பாதுகாப்பாகவும் கௌரவமான முறையிலும் மீளக் குடியேறி அல்லது புதிதாகக் குடியேறியமையை உறுதிப்படுத்தல் மற்றும்

(ii) நாட்டின் உள்நாட்டில் புலம்பெயர்ந்தவர்களும் அகதிகளும் அபிவிருத்திச் செயற்பாடுகளுக்கு உள்ளடக்கப்படுவதற்கு வசதியளிப்பதன் மூலம் அவர்களை புனரமைப்பதற்கும் அவர்களுக்கு உதவியளிக்குமுகமாக அந் நபர்களை மீளக் குடியேற்றி புதிதாகக் குடியேற்றுவதை இலகுபடுத்தல்.

எவ்வாறெனினும், அதிகாரசபை ஆரம்பம் முதல் மேற்குறித்த நோக்கத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருக்கவில்லை. இவ்வாறே அதிகாரச்சட்டத்தின் II ஆம் பகுதியின் 14 ஆம் பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கத்தை எய்துவதற்காக அதிகாரசபையினால் (அ) முதல் (ச) வரை மேற்கொள்ளப்பட வேண்டிய 15 செயற்பாடுகள் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் இது வரை அச் செயற்பாடுகள் எவையும் வெற்றிகரமாகப் பூர்த்திசெய்வதற்காக அதிகாரசபை செயற்பட்டமைக்கு எவ்வித சான்றுகளும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) பணிப்பாளர் சபை அங்கத்தவர்கள் 09 பேரைக் கொண்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் போது 03 பணிப்பாளர் சபைக் கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. மேலும் 2008 ஆம் ஆண்டு முதல் 2010 வரையான காலப்பகுதியின் போது ஒரு வருடத்திற்கு ஒரு பணிப்பாளர் சபைக் கூட்டம் மாத்திரமே நடாத்தப்பட்டிருந்தது. 2003 யூன் 02 ஆம் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 4 ஆம்

பந்தியின் பிரகாரம் மாதாந்த பணிப்பாளர் சபைக் கூட்டத்தின் மூலம் செயலாற்றல் ஒன்று மேற்கொள்ளப்பட்டு அதன் நடவடிக்கைகள் நாளதுவரையாக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டியிருந்த போதிலும் இதன் பிரகாரம் நடவடிக்கை ஏடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறே எதிர்காலத்திலும், மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் தொடர்பான தீர்மானங்கள் பலவும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அதிகாரசபைக்கு ஆரம்பம் முதல் வருடாந்தப் பாதீட்டின் மூலம் மீண்டெழும் செலவினத்திற்காக மாத்திரம் ஏற்பாடுகள் வழங்கப்பட்டிருந்ததுடன் அதிகாரசபையினால் மூலதனச் செலவினத்தை ஏற்பதற்காக அமைச்சினால் நிதி ஏற்பாடு கோரப்பட்டிருக்கவில்லை.

### 4.3 பதவியணி நிர்வாகம்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட பதவியணி 25 ஆனதுடன் இதில் 20 பேர் ஆட்சேர்க்கப்பட்டு வேலைப் பகிர்வு மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் செயலாற்றல் தொடர்பான மதிப்பீடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. ஆரம்பம் முதல் வெற்றிடமாகக் காணப்பட்ட 5 உத்தியோகத்தர்களை ஆட்சேர்ப்பதற்கு மீளாய்வாண்டு வரையிலும் அதிகாரசபை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 5. கணக்களிப்பு மற்றும் நல்ஆளுகை

### 5.1 நிதிக்கூற்றுக்களின் சமர்ப்பணம்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் திணைக்களச் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் ஒவ்வொரு நிதியாண்டிற்குமான நிதிக்கூற்றுக்கள் நிதியாண்டு பூர்த்தியுற்று 60 நாட்களுக்குள் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கான அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் 2012 மே 08 ஆம் திகதியே கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்தன. அதாவது 68 நாட்கள் தாமதமடைந்தேயாகும்.

## 5.2 கூட்டிணைந்த திட்டம்

அதிகாரசபையினால் 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடி/12 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கையின் 5 ஆம் பந்தியின் பிரகாரம் அதிகாரசபையின் நோக்கமும் பிரதான பணியும் மேற்கொள்வதற்காக 03 ஆண்டுகளுக்குக் குறையாத காலத்திற்காக கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட வேண்டிய போதிலும் மீளாய்வாண்டிற்கு நாளதுவரையாக்கப்பட்ட கூட்டிணைந்த திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.3 செயற்பாட்டுத் திட்டம்

அதிகாரசபையினால் செயற்பாட்டுத் திட்டம் தயாரிக்கப்பட்டிராமையால் வருடாந்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய செயற்பாடுகள் உறுதியாக இனங்காணப்பட்டிருக்கவில்லை.

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுத்துறைகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) செயற்திறனும் மதிப்பீடும்

(ஆ) ஆளணி முகாமைத்துவம்

ஒப்பம்: எச்.ஏ.எஸ் சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி
*Ms/v*